**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW-10 | Taluk | : | |
| Name | : | திரு. இளஞ்செழியன் | Occupation | : | |
| Father Name | : | திரு. சரவணன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 25.8.2025**

A4 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் சாலைகிராமம், பழைய மாரியம்மன் கோவில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். வழக்கில் இறந்துபோன அப்பு என்கிற ஜகநாதனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 18.1.2018 அன்று 9.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது ஏரியாவில் சத்தம்கேட்டது நான் வெளியில் போய் பார்த்தேன் அப்போது ராஜேந்திரன் என்பவர் ஆதி மாரியம்மன்கோவில் ஒயின்ஷாப் அருகே அப்புவிடம் கலிவரதன், ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்வதாக சொன்னார், நான் மோகன், முருகன், சின்னராசு ஆகியோர் இருசக்கர வாகனத்தில் அவ்விடத்திற்கு போனோம். அப்போது கலிவரதன், மற்றும் ஆஜராகியுள்ள நபர்கள் அப்புவிடம் நீ எங்களை பற்றி போலிஸில் சொல்லுகிறாய் உன்னால் பிரச்சனையாக இருக்கிறது என்று தேவ்டியா மகனே என்று சொல்லி திட்டியும், அரிவாள், வால், கட்டை, கம்பி ஆகியவற்றால் மண்டையில் அரிவாளால் கலிவரதன் வெட்டினார். ராமன் என்பவரும் வெட்டினார், கோஜா சுரேஷ் என்பவர் அரிவாளால் மண்டையில் வெட்டினார் முத்தமிழ் செல்வனும் மண்டையில் வெட்டினார். பாலா, தினேஷ், மற்றும் ஒரு தினேஷ், கரிகாலன், கோபிநாத், அஜித் ஆகியோர் அவர்கள் வைத்திருந்த வால் கம்பி கட்டையால் சரமாரியாக அடித்தார்கள் வெட்டினார்கள். அதனால் அவர் இறந்துவிட்டார். எதிரிகள் இருசக்கர வாகனத்தை

எடுத்துவிட்டு ஒடிவிட்டார்கள் பக்கத்தில் வந்தால் வெட்டுவேன் என்று சொன்னார்கள். 19.1.2018 அன்று போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

போலிஸ் என்றைக்கு எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார்கள் என்றால் இரவு 12 1/2 இருக்கும். போலிஸ் விசாரிக்கும்போது எதிரிகள் இருச்க்கர வாகனத்தில் போனார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் கம்பி மற்றும் கட்டையால் அடித்ததாக போலிஸாரிடம் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் எத்தனை பேர் போனோம் என்றால் ஆறுபேர் போனோம். ஆறுபேரும் நூறு அடிதூரத்தில் இருந்து யார்யார் எங்கெங்கு வெட்டினார் என்று பார்த்தோமா என்றால் பார்த்தோம். சாட்சி சின்னராசா எனக்கு சின்ன மாமா என்றால் ஆமாம். சம்பவ காலத்தில் நான் PLA ஹோ ட்டலில் இரவு காவலராக பணியாற்றினேனா என்றால் இல்லை ஆனால் அங்கு வேலை பார்த்தேன். வெட்டுபட்ட பிறகு கீழே கிடந்தவரை துக்கி பார்த்தோமா என்றால் இல்லை. என் தாய்மாமா பையன் மீது மூன்று கொலை வழக்குகள், ராபரி வழக்குகள் 15, 20 வழக்குகள் தஞ்சாவூர், திருப்பூரில் உள்ளது என்றால் 15 இருக்கும். சம்பவ இடத்திற்கும் சாலைக்கார தெருவிற்கும் சுமார் 2 1/2 கி.மீ இருக்கும் என்றால் 300 மீட்டர். 300 மீ வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. போலிஸ் ஸ்டேசன் போனபோது மணி என்ன என்றால் நான் போகவில்லை. காவல்நிலையத்தில் என் மாமா மட்டும் புகார் கொடுக்க போனார் என்றால் ஆமாம். என் மாமா கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கிறார் என்றால் தெரியாது ADMKவில் இருந்தார். இறந்துபோன என் மாமா பையன் கீழே வாசல் காவல்நிலையத்தில் ரவுடி லிஸ்டில் உள்ளார் என்றால் ஆமாம். சம்பவம் தொடர்பாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. இறந்தவர் என் மாமா பையன் என்பதால் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

மேற்கண்ட குறுக்குவிசாரணை ஒப்புகொண்டு தொடர் குறுக்குவிசாரணை

சாலைக்கார தெரு 1/4 கி.மீ நீளம் இருக்கும் என்றால் ஆமாம். இரண்டு பக்கமும் வீடுகள் நெருக்கமாக உள்ள தெரு என்றால் ஆமாம். சாலைக்கார தெருவிலிருந்து

அண்ணாநகர் எத்தனை கி.மீ என்றால் 1 1/2. அண்ணாநகரிலிருந்து காமராஜ் நகர் எவ்வளவு தூரம் என்றால் 1 1/2 கி.மீ. காமராஜ்ர் நகரிலிருந்து ஆதி மாரியம்மன் கோவில் எவ்வளவு தூரம் என்றால் 11/2 கி.மீ. சாலைக்கார தெருவிலிருந்து ஆதி மாரியம்மன் கோவில் தெருவுக்கு போக அண்ணாநகர் காமராஜர் நகர் தாண்டி போக வேண்டும் என்றால் ஆமாம். சாலைக்கார தெருவிலிருந்து புன்னை நல்லூர் மாரியம்மன்கோவிலுக்கு சாலையில் லைட் வசதி இருக்காது என்றால் பைபாஸில் இருக்கும் அதற்கு முன்பு வரை இருக்காது. என் தாய்மாமன் சொல்லும் சம்பவ இடத்திலிருந்து சாலைக்கார தெரு வழியாக புகார் கொடுக்க போனார் என்றால் ஆமாம். புகார் கொடுத்த பிறகு மறுநாள்தான் சின்னராசு வீட்டிற்கு போனார் என்றால் தெரியாது. நான் நேரடியாக வீட்டிற்கு படுத்துவிட்டேனா என்றால் வீட்டில் இருந்தேன் படுக்கவில்லை. என் வீட்டில் நான் என் அம்மா என் அண்ணன் ஆகியோர் இருந்தோம். நான் சின்னராசு வீட்டிற்கு போகவில்லை என்றால் ஆமாம். என் வீட்டிற்கு போய் என் அண்ணன் மற்றும் என் அம்மாவிடம் தகவல் சொன்னேன் அண்ணன் என்னுடன் வந்திருந்தார். என் அண்ணன் என்னோடு வீட்டில் வந்து இருந்தானா என்றால் இல்லை ஸ்டேசன் போனான். அன்று இரவு முழுவதும் என் அம்மா என்னோடு வீட்டில் இருந்தார் என்றால் ஆமாம். என் அண்ணன் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால் 12 1/2 இருக்கும். என் அண்ணன் அதன்பிறகு எங்கும் போகவில்லையா என்றால் நான் துங்கிவிட்டேன் தெரியாது. என் அம்மா சின்னராசு வீட்டிற்கு மறுநாள் காலையில் 9 மணிக்கு போனாரா என்றால் போனார். இடைபட்ட நேரத்தில் நான் போன் செய்து யாருக்கும் சொல்லவில்லை என்றால் ஆமாம். சாலைக்கார தெருவில் அனைவரும் உறவினர் என்றால் ஆமாம். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எதுவும் நடைபெறவில்லை என்றும் போலிஸார் சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் சொல்லி கொடுத்ததுபோல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு அழைத்து போக நான் முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.